# திருக்குறளில் வாழ்வியல் உணர்வுகள்

**மோ.கி.வெங்கடேசன்,**

**ஆவண எழுத்தர், க.எண் 45 மசூதி தெரு,**

**பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம், அ.கு.எ.636905**

14

**ஆய்வுச்சுருக்கம்**

அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை பிறனில் விழையாமை, வாழ்க்கை புறங்கூறாமை போன்ற பல அதிகாரங்களில் வாழ்விற்குத் தேவையான நெறிகளை நமக்கு சொல்லிக் கொடுத்து வழி நடத்துகின்றார். இந்நெறிகளைப் பின்பற்றினால் நாட்டில் கொலை, கொள்ளை, வன்முறைகள், பாலியல் வன்கொடுமைகள் எதுவும் நடக்காது. இதனால், மனிதனும் மகிழ்ச்சியாக இருப்பான். நாடும் இனிமையாக இருக்கும் என்பதனை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். வள்ளுவம் வாழ்வியல் உணர்வுகளின் கடல். அதில் மூழ்கி முத்தெடுக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

**ஆய்வுநோக்கம்**

ஒருமனிதன் வள்ளுவத்தைப் படித்தால் பிரச்சனை இல்லாமல் மகிழ்ச்சியாக வாழலாம். அப்படியே பிரச்சனை ஏற்பட்டால் அதனைச் சரிசெய்தும் வாழலாம் என்பதைக் கூற விழைவதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

**திறவுச்சொற்கள்**

வன்புணர்ச்சி, பச்சோந்தி, சுயநலங்கள், திண்ணை

**முன்னுரை:**

மகிழ்ச்சியாக வாழ்வதும் வெற்றிதான் என்பதை மனிதன் உணர வேண்டும். மனிதன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வள்ளுவனின் குறள் உதவிபுரியும். இன்று மக்கள் பலபேர் வாழத் தெரியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். காரணம், அவர்களுக்குண்டான பிரச்சனைதான். மனிதன் பிறக்கும் போது பிரச்சனையோடு பிறக்கவில்லை என்பதையும், இங்கு வாழும் போதுதான் பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கிக்கொள்கிறான் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இப்படி பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டு அதைத் தீர்க்க

முடியாமல் பலநேரங்களில் தடுமாறிப் போய்விடுகின்றான். பாவம் அவர்களுக்குத் தெரியாது பிரச்சனைகளின் தீர்வு வள்ளுவத்தில் உண்டென்று.

**அன்புடைமை:**

ஓர் உயிரினம் வாழ்வதற்கு அன்பு மிகமிக இன்றியமையாதது. அன்பு இல்லையென்றால் இவ்வுலகமே இயங்காதென்று, கூறினால் அது மிகையாகாது. ஆனால் அன்பு இன்றுகொஞ்சம் ஏதோ இருப்பதனால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று எண்ணத் தோன்றுகின்றது.

அன்பாக வாழ்க்கை இல்லாதிருப்பதனால், நம் சமூகத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள், பிரச்சனைகள், வன்முறைகள், கொலைகள், பாலியல் வன்கொடுமைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு நிகழாமல் இருக்க “அன்பு” தேவை. அவ்வாறான அன்பை வள்ளுவரின் வழி அறிவோம்.

அன்பு இல்லதவர் எல்லாப் பொருளும் தமக்கே உரியதாகக் கொள்வர். அன்புடையவர் தன் உடலையும் பிறருக்கு உரியதாக்கி வாழ்வர்(குறள்.72). இதைவிட, சரியாக அன்பைப் பற்றி யாராலும் விளக்கிக் கூறமுடியாது. அந்தளவிற்கு அன்பைப் பற்றி சிறப்பானதொரு முறையில் வள்ளுவர் விளக்கிக் கூறுகின்றார். மனிதன் எல்லாப் பொருளும் தமக்கே உரியது என்ற சிந்தனையைத் தூக்கி எறிந்தால் மனிதனும் வளம் பெறுவான். அவன் மூலம் நாடும் வளம் பெறும் என்பதை அறியமுடிகின்றது.

அன்பு இருந்தால் மட்டும்தான் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். எனவே இந்த எண்ணம் தோன்ற மனித இனத்தில் அன்பு இன்னும் அதிகமாக வளர வேண்டும். ஆகையால், வள்ளுவரின் வழியில் அன்போடு வாழ்வோம். ஏனென்றால் அன்பேதான் வாழ்க்கை.

**விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் பண்பு மனித இனத்தில், உறவுகள் நன்றாக வளர வைக்கக் கூடிய பண்பாக உள்ளது.

“வந்தோரை வாழவைக்கும் பண்பு தமிழருக்கு உண்டு”

“வந்தவர்களுக்கு உணவு இடும் வழக்கமும் தமிழருக்கு உண்டு”.

அதனால்தான் வீட்டிற்கு வெளியே திண்ணைக் கட்டிவாழ்ந்தான் தமிழன். திண்ணையைக் கட்டிவாழ்ந்த நோக்கம் காடு, மேடுகளைக் கடந்து, நடந்து வருவோரை அமரவைத்து, விருந்தோம்பல் செய்வதுதான்.

இல்வாழ்வில் செல்வம் சேர்த்துவாழ்தல், விருந்தினரைப் போற்றி பிறருக்கு உதவி செய்வதற்காகத் தான் என்கிறார் வள்ளுவர். செல்வம் சேர்ப்பதே விருந்தினர்க்கே என்று மக்களிடம் கூறினால் அதைக் கேட்டு சிரிப்பார்கள். ஏனென்றால் நாம் செல்வம் சேர்ப்பது விருந்தினருக்கு அல்ல. நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் அதனால்தான் சுயநலங்கள் இன்று தலைவிரித்தாடுகின்றது.

நாம் வாழ்வதுதான் சரியான வாழ்க்கை என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நம்முடைய வாழ்வியல் என்பது உண்மையான வாழ்வியல் அல்ல. வள்ளுவரின் வாக்குதான் உண்மையான வாழ்வியல் ஆகவே செல்வத்தை மற்றவர்களுக்காக சேமித்து வைப்போம்! விருந்தினரை உபசரிப்போம்! உண்மையான வாழ்வை வாழ்வோம்!

**இனியவை கூறல்:**

மனிதனுடைய சொல் அதாவது வார்த்தைகள் எவ்வளவு இனிமையாக இருக்கவேண்டும் என்பதை, வள்ளுவர் பல இடங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதில் முக்கியமாக ஒருகுறளில் (குறள்.92) மன மகிழ்ச்சியோடு ஒரு பொருளை மற்றவர்களுக்குக் கொடுப்பதைவிட இனிய வார்த்தைகளைக் கூறுவதே சிறந்தது என்கிறார்(குறள்.92). அதாவது நாம் பொருளுக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதனால் தான் என்னவோ, எந்த நிகழ்ச்சி என்றாலும் பொருளைப் பரிசாக கொடுக்கின்றோம் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் வள்ளுவன் பொருள் கொடுப்பதைவிட இனிமையானச் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார் என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வறுமை ஒழியவேண்டும் என்றால், இனிமையான சொற்களைப் பேசவேண்டும் என்று சொன்னவர் வள்ளுவர்(குறள்.94). எனவே, இனிமையாகப் பேசினால் உறவுகள் வளரும். உறவுகள் வளமாக இருந்தால் உலகம் உன்னைப் பாராட்டும். ஆகையால், உறவுகள் வளர, அதனால் வாழ்வுமலர, வள்ளுவரின் குறள் வழிநின்று இனிய சொற்களைப் பேச முயல வேண்டும்.

**செய்ந்நன்றி அறிதல்:**

நன்றியை மறக்கும் இனமாக மனித இனம் இருக்கக் கூடாது. உதவி செய்தவரை மறவாமல் இருக்கக் கூடிய இனமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார் வள்ளுவர்(குறள். 103). பயன் கருதாமல் செய்த உதவியின் அன்புத் தன்மையை ஆராய்ந்தால், அதன் தன்மை கடலைவிடப் பெரியதாகும் என்கிறார் வள்ளுவர்.

ஒருமனிதன் கொலைக்கு ஒப்பான துன்பத்தைச் செய்தாலும் நாம் துன்பமுற்ற காலத்தில் அவர் செய்த சிறு உதவியை நினைத்தாலே அத்துன்பம் மறைந்துவிடும் என்கிறார் வள்ளுவர். (குறள் 109) நாம் ஒருமனிதன் பல உதவிகள் செய்தால் அவரைப் பாராட்டுவோம். ஆனால் அதே மனிதன் ஒரு சிறுதீமையைச் செய்தால், அவர் செய்த நன்மைகளை மறந்து விடுகிறோம். எனவே ஒருவர் செய்த நன்றியை நாம் மறக்கக் கூடாது. வள்ளுவரின் குறளைப் பின்பற்றி செய்த நன்றியை மறவாமல் வாழ முயல வேண்டும்.

**நடுவுநிலைமை**

ஒரு மனிதனின் சிறந்த பண்புகளில் மிக முக்கியமான ஒன்று நடுவுநிலைமைத் தவறாமை ஆகும். மனிதன் நடுவுநிலைமைத் தவறினால், அவனைப் பச்சோந்தியாக உவமிப்பர். ஏனென்றால் பச்சோந்திதன் உடலின் நிறத்தை மாற்றிக் கொண்டே இருக்கும்.

நடுவுநிலைமையோடு மனிதன் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும் இவ்வாறான நடுவுநிலைமையை, வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார் (குறள் 111). இக்குறளில் பகை, உறவு, நட்பு என்ற நிலைகளில், அவரிடத்தும் நடுவுநிலையோடு நின்று ஒழுகுதல், அறவழியில் செல்லும் நன்மையாகும் என்கிறார் வள்ளுவர்.

இன்று மனிதன் பணத்திற்காகவும், பகைக்காகவும் நடுவுநிலைமை இல்லாமல் தன் நிலையை மறந்து வாழ்கின்றான். நடுவுநிலையோடு வாழ்பவன் தான் சிறந்தமனிதன். எனவே நடுவுநிலைமையோடு வாழ வள்ளுவனைப் பின்பற்றுவோம்.

**பிறனில் விழையாமை**

பிறன் மனைவியை விரும்பும் அறிவின்மையைவிட, மிகப் பெரிய அறிவின்மை வேறொன்றும் கிடையாது. கணவன், தன் மனைவியை மட்டும் நேசிக்க வேண்டுமே தவிர, மற்றவருடைய மனைவியை நேசிக்கக்கூடாது. அதே போல் மனைவியும் வேறொரு கணவனை நேசிக்கக் கூடாது.

நம் சமூகத்தில் அதிகமாக நடக்கக் கூடியப் பிரச்சனைகளில் ஒன்று, அடுத்தவர்களின் மனைவியையோ, கணவனையோ நாடுவது தான். இதனால் பல கொலைகள், வன்புணர்ச்சிகள் நடைபெறுகின்றன. பிறன் மனைவியை விரும்புகின்றவனிடம் பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கு குற்றங்களும், ஒருநாளும் நீங்காமல் இருக்கும் (குறள்.146) என்று கூறுகின்றார். எனவே பிறனில் விழையாமையை ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய கடைமையாகக் கொள்ளவேண்டும்.

**புறங்கூறாமை**

ஒருவர் தன்னைப் பற்றி உரையாடச் சொன்னால் பேசத் தயங்குவார். பேசவே தெரியாது என்று கூடச் சொல்லலாம். ஆனால் மற்றவர்களைப் பற்றி பேசச் சொன்னால், படபடவென்று பேசுவார். ஏனென்றால், தம்மைப் பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பதுதான் அதிகம்.

இவ்வாறு, மற்றவர்களைப் பற்றி தெரிந்து வைத்திருப்பதால், எளிதாக நாம் ஒருவரைப் புறங்கூறிவிடுகிறோம். புறங்கூறுவது மிகப் பெரிய பாவச் செயல் ஆகும். இவ்வுலகில் மற்றவர்களைப் பற்றி தெரிந்து வைத்திருப்பதால், எளிதாக நாம் ஒருவரைப் புறங்கூறிவிடுகிறோம். புறங்கூறுவது மிகப் பெரிய பாவச் செயல் ஆகும். இவ்வுலகில் மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசுவதற்கு, யாருக்கும் உரிமை இல்லை என்பதனை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புறங்கூறாமையை வள்ளுவர் கூறுகின்றார். (குறள் 181)

ஒருவன் அறமெனக் கருதப்படும் செயல்களைச் செய்யாவிடினும், புறங்கூறாதவன் என்று உலகத்தாரால் போற்றப்படல் வேண்டும். எனவே ஒருவன் மற்றவருக்கு நன்மை செய்யவில்லையென்றாலும் பரவாயில்லை, புறங்கூறக் கூடாது என்கிறார் வள்ளுவர். புறங்கூறுவது தவறு என்பதனை மனிதன் புரிந்து கொண்டு, அதைத் தவிர்க்க வேண்டும்.

**முடிவுரை**

மனிதன் மனிதனுக்காக எழுதி இலக்கியம் திருக்குறள் ஆகும். ஒன்றே முக்கால் அடிகளில் வாழ்க்கையைச் சொன்னவர் வள்ளுவர் என்றால் அது மிகையாகாது. அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, பிறனில் விழையாமை, வாழ்க்கை புறங்கூறாமை போன்ற பல அதிகாரங்களில் வாழ்விற்குத் தேவையான நெறிகளை நமக்கு சொல்லிக் கொடுத்து வழி நடத்துகின்றார். இந்நெறிகளைப் பின்பற்றினால் நாட்டில்

கொலை, கொள்ளை, வன்முறைகள், பாலியல் வன்கொடுமைகள் எதுவும் நடக்காது. இதனால், மனிதனும் மகிழ்ச்சியாக இருப்பான். நாடும் இனிமையாக இருக்கும் என்பதனை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் திருக்குறளைப் பற்றி பள்ளி, கல்லூரி பாடங்களில் மதிப்பெண்களுக்காக படிக்கின்றோம். அதை வாழ்க்கையில் பயன்படுத்தத் தவறிவிட்டோம். பயன்படுத்தத் தவறிவிட்ட காரணத்தினால் நம் தடம் மாறிபோய்க் கொண்டிருக்கின்றறோம் என்பதனை மனிதன் உணரவேண்டும். வாழ்வில் தடுமாறிச் சென்றுவிட்டு, பின்பு வாழ்க்கைப் பிடிக்கவில்லை. வாழப் பிடிக்கவில்லையென்று சொல்லி புலம்பிக் கொள்வதில் பயன் இல்லை.

எனவே, வள்ளுவனைப் பின்பற்ற வேண்டும். வாழ்வில் இனிமையாக இருக்கவேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிவாக உள்ளது.

தமிழ் வாழ்க! தமிழால் வள்ளுவன் வாழ்க! வள்ளுவனால் தமிழ் வாழ்க!

**துணைநூற்பட்டியல்**

1. திருக்குறள், தேவிரா உரை, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை – 01.
2. வரதராசனார். மு. டாக்டர், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரிநிலையம், சென்னை, 1959.